## சுருக்கம்

தொழில்நுட்பக் கல்வி – 20.9.2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பு – அரசு பள்ளிகளில் படித்து ஏழரை விழுக்காடு (7.5%) முன்னுரிமையின் அடிப்படையில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் பொறியியற் கல்லூரிகளில் சேரும் மாணாக்கர்களுடைய கல்விக்காக ஆகக்கூடிய செலவினங்களான கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்துக் கட்டணங்களையும் அரசே வழங்குதல் – நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

**உயர்கல்வித் (ஜே2) துறை**

அரசாணை( நிலை) எண்: 221 நாள்: 15.11.2021

பிலவ வருடம், ஐப்பசி–29

திருவள்ளுவர் ஆண்டு, 2052

படிக்கப்பட்டவை :

1) தமிழ்நாடு அரசுப் பள்ளிகளின் மாணவர்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் இளநிலை தொழிற்கல்வி படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம், 2021 ( சட்டம் எண். 14 /2021).
2) அரசாணை (நிலை) எண். 167, உயர்கல்வித் (ஜே2) துறை , நாள் 31.8.2021.
3) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 20.9.2021 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பு.
4) தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கடிதம் எண். 3300/ TNEA/ 2021 Fee Reimbursement நாள் 29.10.2021.

*******

ஆணை:

20.9.2021 அன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது: –

"அரசு பள்ளிகளில் படித்து 7.5 சதவீத இடஒதுக்கீடு மூலம் தொழிற் கல்லூரிகளில் சேரும் மாணவர்களுடைய கல்விக்காக ஆகக்கூடிய செலவினங்களான கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், உள்ளிட்ட அனைத்தும் அரசால் ஏற்றுக் கொள்ளப்படும்".

2. தமிழ்நாடு அரசுப் பள்ளிகளின் மாணவர்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் இளநிலை தொழிற்கல்வி படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம்.

...2

2021 (சட்டம் எண். 14 /2021) இன்படி, பல்கலைக்கழகங்கள், தனியார் கல்லூரிகள், அரசு உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் அரசு கல்லூரிகளில் வழங்கப்படும் பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், மீன்வளம், சட்டம் மற்றும் பிற தொழிற்கல்வி பட்டப் படிப்புகளுக்கான அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கான சேர்க்கையில், மாநில அரசுப் பள்ளிகளில் ஆறு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரையில் பயின்ற மாணவர்களுக்கு ஏழரை விழுக்காடு (7.5%) முன்னுரிமையின் அடிப்படையில் இடங்கள் ஒதுக்கீடு வழங்கப்படுகிறது,

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு பொறியியல் சேர்க்கையில் அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு 7.5 விழுக்காடு முன்னுரிமையின் அடிப்படையில் ஒதுக்கீடு வழங்குவது குறித்த வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டன.

4. 20.9.2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் உரிய கருத்துருவினை கீழ்க்கண்டவாறு அரசுக்கு அனுப்பியுள்ளார்:-

(i) 2021-22 ஆம் கல்வியாண்டில் பொறியியல் சேர்க்கையில் அரசுப் பள்ளி மாணாக்கர்களுக்கான 7.5 விழுக்காடு முன்னுரிமையின் அடிப்படையில் சேர்ந்த மாணாக்கர்களின் எண்ணிக்கை 7,876 ஆகும்.

(ii) மொத்த படிப்புக் கட்டணம் (Course fee) என்பது, சேர்க்கைக் கட்டணம், கல்விக் கட்டணம், நூலகக் கட்டணம், இணைய கட்டணம் மற்றும் சமூக நிதி(Internet Fee and Society Charges), வளர்ச்சி நிதி, சிறப்புக் கட்டணம், கணினி நிதி, கல்வி ஊடக சேவை நிதி(Education Media Service Charges), பல்கலைக் கழக கலை மற்றும் தொழில் சேவை நிதி (University Cultural and Professional Society Fee), மாணவர் விபத்து மற்றும் மருத்துவ சேவை நிதி, பதிவு மற்றும் சேர்க்கைக் கட்டணம், சான்றிதழ் சரிபார்ப்புக் கட்டணம், செஞ்சிலுவைச் சங்கம் உறுப்பினர் கட்டணம் மற்றும் கொடி நாள் நிதி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். விடுதிக் கட்டணம் (Hostel fee) என்பது நுழைவுக் கட்டணம், நிர்வாகக் கட்டணம், விடுதி அடிப்படை வசதிக் கட்டணம் (Hostel Amenities Fees), வளர்ச்சிக் கட்டணம், அறை வாடகை, மின்சார கட்டணம், பாதுகாப்பு நிதி (Security Charges) மற்றும் மாதாந்திர உணவுக்கான கட்டணம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

(iii) கட்டணங்களை நிர்ணயிக்கும் குழுவால் சுயநிதி பொறியியல் கல்லூரிகளுக்கான கல்விக் கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்படுகின்றன. அதன்படி, ஒற்றைச் சாளர கலந்தாய்வு மூலம் சேர்க்கை பெறும் மாணாக்கர்களுக்கு தரச் சான்று பெறாத (Non-accredited) படிப்புகளுக்கு ரூ.50,000/-ம், தரச் சான்று பெற்ற (Accredited) படிப்புகளுக்கு ரூ.55,000/-ம் ஒருமுறை பெறப்படும் வளர்ச்சி நிதியாக(Development charges) ரூ.5,000/-ஆக குழு, கட்டணங்களை நிர்ணயித்துள்ளது. வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சிக்